**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons),**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2056 திருவள்ளுவர் ஆண்டு, விசுவாவசு வருடம், மாசி திங்கள் 26–ம் தேதி**
**2026– ம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் நாள் செவ்வாய்க்கிழமை**
**அசல் வழக்கு எண் –8/2020**
**C.N.R.No.TNSV150000962020**

1.மாரியம்மாள்
2.செந்தில்குமார்
3.உமாதேவி
4.காளீஸ்வரி
5.முருகதேவி ....வாதிகள்

**/எதிர்/**

1.வசந்தா
2.குமார்
3.சரவணன்
4.ராஜா
5.முருகன்
6.வேலுச்சாமி .....பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 05.03.2026–ம் அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்த போது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S .சுப்பராயன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.SPT.சேதுராமச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இருதரப்புவாதங்களைக் கேட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

தாவா சொத்து ஏற்கனவே வாதிகளுக்கு பாத்தியமானது என மு.வ.7/2004 என்ற வழக்கில் மானாமதுரை முதன்மை டி.மு கோர்ட்டில் தீர்வு காணப்பட்டுள்ள நிலையில் வாதிகளிடம் அனுமதி பெற்று பிரதிவாதிகள் தாவா சொத்தில் குடியிருந்து வருவதில் காலி செய்து வாதிகளிடம் ஒப்படைக்க வேண்டியும், பிரதிவாதிகள் தவறும் பட்சத்தில் வாதிகளால் பிரதிவாதிகளை காலி செய்துக்கொள்ள ஏதுவாக நடவடிக்கை மேற்கொள்ள பிரதிவாதிகள்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:35:24 +0530

மீது Eviction நடவடிக்கைக்கான ஒரு சுவாதீன பரிகாரம் வழங்கியும், இவ்வழக்கின் செலவுத்தொகையை வாதிகளுக்கு பிரதிவாதிகள் கொடுக்கும்படியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) வாதிகள் தரப்பு வழக்குரையின் சுருக்கம்:</u>**

தாவாச் சொத்தின் நத்தம் புல எண். 277/13 என்றும், அதன் விஸ்தீரணம் கிழமேல் 16 அடி தென்வடல் 20 அடி அளவுள்ள காரை வீடாகும். தாவாச் சொத்தும் இந்த வாதிகளுக்கு பாத்தியபட்டதாகும். தாவாச் சொத்து உள்ளிட்ட இன்னும் பல சொத்துக்கள் சம்மந்தமாக மானாமதுரை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் முதலேற்பு வழக்கு எண். 7/2004 என்ற வழக்கும் இவ்வழக்கில் கண்ட 1ம் பிரதிவாதிக்கு கணவரும், 2 முதல் 5 வரை பிரதிவாதிகளுக்கு தகப்பனாருமான கருப்புச்சாமி என்பவரை 1 ம் பிரதிவாதியாகக் கண்டும், இவ்வழக்கில் கண்ட 6ம் பிரதிவாதி வேலுச்சாமியை 2ம் பிரதிவாதியாகக் கண்டும் சிவகங்கை கூட்டுறவு தொடக்க வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கி அதன் செயலாளர் மற்றும் மானாமதுரை வட்ட கிராமக் கூட்டுறவு வீட்டுவசதி வாரிய செயலாளர் ஆகியோர்களை 3, 4 பிரதிவாதிகளாகக் கண்டு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு பூரண விசாரணைக்குப் பிறகு 23.01.2006ம் தேதியில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி வழக்கில் தாவாச் சொத்து 8வது இலக்கச் சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி 8வது இலக்கச் சொத்தான தாவாச் சொத்தும் வாதிகளுக்கு பாத்தியம் என விளம்புகை செய்தும். அதன் பின் தொடர்ச்சியாக வாதிகள் அமைதியாக அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ எவ்வித தடையும். இடையூறும் செய்யாமலிருக்கும் பொருட்டு பிரதிவாதிகள் மீது ஒரு நிரந்தர உறுத்துக் கட்டளை உத்தரவு பிறப்பித்து தீர்ப்பும் வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி முதலேற்பு வழக்கு எண். 7/2016 வழக்கின் தீர்ப்பாணையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் பிராதுடன் 1வது இலக்க ஆவணமாக தாக்கல் செய்யப்படுகிறது என்றும், இந்த நிலையில் மேற்படி கருப்புச்சாமியும் இறந்து விட்டார் என்றும், அவரது வாரிசுகளான 1 முதல் 5 வரை பிரதிவாதிகளும், 6ம் பிரதிவாதியும் வாதிகளிடம் தாவாச் சொத்தில் இருந்து வரக் கூடிய காரை வீட்டில் குடியிருந்து கொள்வதாக வாதிகளிடம் கடந்த ஓராண்டுக்கு முன்பு அனுமதி கோரி அதன்படி வாதிகளும் பிரதிவாதிகளை தாவாச் சொத்திலிருந்து வரக் கூடிய காரை வீட்டில் குடியிருந்து கொள்ள வாய்மொழியாக அனுமதி வழங்கியும், எவ்வித முன்பணமும் வாதிகளால் பிரதிவாதிகளிடம் பெற்றுக் கொள்ளாமல் நல்லெண்ணத்தின் அடிப்படையில்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:35:31 +0530

பிரதிவாதிகளை குடியிருந்து கொள்ளுமாறு வாதிகள் கூறினர் என்றும், மேலும் வாதிகளால் தாவாச் சொத்தில் இருந்து பிரதிவாதிகளைக் காலி செய்து கொள்ளக் கூறும் சமயம் எவ்வித வில்லங்க விவகாரமும் இல்லாமல் காலி செய்து வாதிகள் வசம் ஒப்படைப்பதாக பிரதிவாதிகளும் உறுதி அளித்தனர் என்றும், அதனை நம்பி வாதிகளும் எவ்வித எழுத்து மூல ஆவணங்களையும் குடியிருந்து கொள்வதற்காக பிரதிவாதிகளிடம் ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்றும், தற்சமயம் வாதிகளுக்கு தாவாச் சொத்தில் உள்ள காரை வீடும் சொந்த உபயோகத்திற்காக தேவைப்படுகிறது என்றும், எனவே பிரதிவாதிகளை தாவாச் சொத்திலிருந்து காலி செய்து நிர் வில்லங்க மன்னியில் வாதிகள் வசம் ஒப்புவிக்கக் கோரி பலமுறை நேரிலும் ஆட்கள் முலமாகவும் வாதிகள் துயர்ந்து வந்தனர் என்றும், பிரதிவாதிகளும் காலி செய்து ஒப்புவிப்பதாகக் கூறி வீண் சாக்குப்போக்குகள் சொல்லி காலம் கடத்தி வந்தனர் என்றும், எனவே வாதிகளும் பிரதிவாதிகளுக்கு கடந்த 28.01.2020ம் தேதியில் வழக்கறிஞர் மூலமாக சட்ட அறிவிப்பும் தாவாச் சொத்திலிருந்து காலி செய்து நிர் வில்லங்க மன்னியில் வாதிகள் வசம் ஒப்புவிக்க வலியுறுத்தி அனுப்பப்பட்டது என்றும், மேற்படி 28.01.2020ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் பிராதுடன் 2வது இலக்க ஆவணமாக தாக்கல் செய்யப்படுகிறது என்றும், மேற்படி வழக்கறிஞர் சட்ட அறிவிப்பை பிரதிவாதிகளுக்கு பதிவுத் தபாலில் அனுப்பியதற்கான அஞ்சலக ரசீதுகளின் தொடர் –6 பிராதுடன் 3வது இலக்க ஆவணமாக தாக்கல் செய்யப்படுகிறது என்றும், மேற்படி அறிவிப்பை 1ம் பிரதிவாதியும், 6ம் பிரதிவாதியும் 01.02.2020ம் தேதியில் பெற்றுக் கொண்டு அஞ்சலக ஒப்புதல் அட்டையும் திரும்பி வரப்பட்டுள்ளது என்றும், மேற்படி அஞ்சலக ஒப்புகை அட்டைகளின் தொடர் –2 அசல் பிராதுடன் 4வது இலக்க ஆவணமாக தாக்கல் செய்யப்படுகிறது என்றும், 2 முதல் 5 வரை பிரதிவாதிகள் ஷை அறிவிப்பை பெற்றுக் கொள்ளாமல் திரும்பி வரப்பட்டுள்ளது என்றும், ஷை திரும்பி வரப்பட்ட கவருடன் கூடிய அறிவிப்புகள் தொடர் –4 அசல் பிராதுடன் 5வது இலக்க ஆவணமாக தாக்கல் செய்யப்படுகிறது என்றும், பிரதிவாதிகளும் தாவாச் சொத்திலிருந்து நிர் வில்லங்க மன்னியில் காலி செய்து வாதிகள் வசம் ஒப்புவிக்க காலம் கடத்தி வருவதால் இந்த வாதிகளுக்கு பெருத்த கஷ்ட நஷ்டமும் இழப்பும் ஏற்படக் கூடியதாக உள்ளது என்றும், மேலும் தாவாச் சொத்தில் இருந்து வரக் கூடிய காரை வீடும் இந்த வாதிகளுக்கு தேவைப்படுவதாலும் பிரதிவாதிகளால் சரிவர பராமரிக்காத நிலையில் பழுதுகள் ஏற்பட்டு

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.10
17:35:36 +0530

விட்டால் மிகுந்த பொருட்சேதம் வாதிகளுக்கு ஏற்படக் கூடியதாக உள்ளது என்றும், ஏற்கனவே இந்த வாதிகளுக்கு மானாமதுரை முதன்மை டி.மு கோர்ட்டில் மு.வ.எண். 7/2004 என்ற வழக்கில் விளம்புகை பரிகாரத்தைப் பொறுத்து தீர்வு காணப்பட்டு வாதிகளுக்கு பாத்தியமானது என விளம்புகை செய்யப்பட்டதால் தாவா வழக்கில் விளம்புகை பரிகாரம் எதுவும் வாதிகளால் கோரப்படவில்லை என்றும், எனவே தாவாச் சொத்திலிருந்து பிரதிவாதிகளை நிர் வில்லங்க மன்னியில் நீதிமன்றம் விடுக்கும் காலக் கெடுவுக்குள் காலி செய்து வாதிகள் வசம் ஒப்புவிக்க ஏதுவாக Eviction நடவடிக்கைக்கு சுவாதீனப்பரிகாரம் கோரி வாதிகளால் தாவா வழக்கும் தாக்கல் செய்யப்படுகிறது என்றும், பிரதிவாதிகளும் தாவா சொத்தின் உரிமையாளர்களான வாதிகள் வசம் தாவாச் சொத்தை எவ்வித நிர்வில்லங்க மன்னியில் ஒப்புவிக்க சட்டப்படி கடமைப்பட்டுள்ளனர் என்றும், மேலும் தாவாச் சொத்திலிருந்து காலி செய்து வாதிகள் வசம் ஒப்புவிப்பதில் பிரதிவாதிகளுக்கு எவ்வித பாதகமும் ஏற்படக் கூடியதில்லை என்றும், மேலும் வாதிகளிடம் பிரதிவாதிகளும் தாவாச் சொத்தில் உள்ள காரை வீட்டில் குடியிருந்து கொள்ள அனுமதி கோரி வாதிகளிடம் அனுமதி பெற்று குடியிருந்து வருவதும் சுமார் ஓராண்டுக்கு முன்னர் என்பதால் தாவா வழக்கும் Eviction நடவடிக்கைக்கு சுவாதீனம் ஒப்புவிக்க உரிய சட்ட காலத்திற்குள்ளாகவே வாதிகளால் தாவா வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2)பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரை/ எதிர்கோருரிமையின் சுருக்கம்:–</u>**

எதிர்வழக்குரையில் ஒப்புக்கொண்ட சங்கதிகளைத் தவிர பிராதில் சொல்லப்படும் பிற விசயங்கள் யாவும் பொய்யானது உண்மையை மறைத்து கூறப்பட்டுள்ளது என்றும், அவை வாதியே நிரூபிக்க வேண்டும் என்றும், உண்மையில் 1ம் வாதியின் கணவரும் 2 முதல் 5 வாதிகளின் தகப்பனாரும் ஆன கந்தையா –1, இந்த 1ம் பிரதிவாதியின் கணவரும் 2 முதல் 5 பிரதிவாதிகளின் தந்தையுமான கருப்புச்சாமி –2, இந்த 6ம் பிரதிவாதி வேலுச்சாமி–3 ஆகியோர்கள் இறந்துபோன முருகேசத் தேவர் என்பவரின் மக்கள் என்றும், தாவாச் சொத்து குறித்து மானாமதுரை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஓ.எஸ்.நம்பர் 7/2004 வழக்கும் 23.01.2006ம் தேதி தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பித்த பின்னீடு இந்த வாதிகள் வகையறாவும் பிரதிவாதிகள் வகையறாவும் கிராம முக்கியஸ்தர்கள் முன்னிலையில் 15.02.2006ம் தேதியில் சமரசம் பேசி மதுரையில் பொதுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட கடையை இந்த வாதிகள் அடைந்து கொள்வது என்றும் தாவாச் சொத்தை பிரதிவாதிகள் அடைந்து கொள்வது என்றும் சமாதானம் பேசி 15.02.2006ம் தேதி முதல் தாவாச் சொத்தை

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:35:42 +0530

இந்த பிரதிவாதிகள் தங்களது தனித்த பாத்தியத்தில் வைத்து அடைந்து அன்றே சுவாதீனம் அடைந்து தங்களது அனுபவத்தில் வைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், ஆதலால் மானாமதுரை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற ஓ.எஸ்.நம்பர் 7/2004 வழக்கையும் மேல் நடத்தாமல் இருந்துவிட்டார்கள் என்றும், பிரதிவாதிகளும் கடந்த 05.09.2006ம் தேதியில் தாவாச் சொத்தில் உள்ள மேற்கோப்பை அகற்றிவிட்டு ஏற்கனவே இருந்த சுவரில் 5 அடி உயரம் கட்டிடம்கட்டி சென்டிரிங் போட்டு இந்த பிரதிவாதிகள் குடியிருந்தும் வீட்டு வரி செலுத்தியும் மின் இணைப்புக்கு கட்டணம் செலுத்தியும் நெடுகிலும் தொடர்ந்து அனுபவித்து வருகிறார்கள் என்றும், வாதிகள் பிரதிவாதிகளுக்கு 28.01.2020ம் தேதியில் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை இந்த 1, 6 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டு இந்த 2ம் வாதியிடம் பேசியதில் வழக்குத் தாக்கல் செய்யபோவதில்லை என்று கூறியதால் பிரதிவாதிகளும் யாதொரு பதில் நோட்டீசும் அனுப்பவில்லை என்றும், பிரதிவாதிகளும் 15.02.2006ம் தேதி முதல் தாவாச் சொத்தையும் தங்களது தனித்த பாத்தியத்தில் வைத்து இந்த வாதிகள் மற்றும் யாவரும் அறிய நிராட்சேபனையாக குடியிருந்து அனுபவித்து வருகிறார்கள் என்றும், தாவாச் சொத்திற்கும் தாவாச் சொத்தில் உள்ள வீட்டிற்கும் இந்த பிரதிவாதிகள் பெயரில் தொடர்ந்து வீட்டுவரி செலுத்தி நாளது வரை தங்களது Effective Possession –ல் வைத்து நிராட்சேபனையாக அனுபவித்து வருவதில் தாவாச் சொத்தில் இந்த பிரதிவாதிகளுக்கும் Prescriptive title by adverse posession –சித்தித்துள்ளது என்றும், இந்த வாதிகளுக்கு தெரிந்தே 15.02.2006 முதல் நாளது வரை பிரதிவாதிகளும் தாவா சொத்தில் குடியிருந்தும் இந்த பிரதிவாதிகள் பெயரில் 31.03.2006 –ம் தேதி முதல் வீட்டு வரிசெலுத்தி அனுபவித்து வருவதையும் இந்த வாதிகள் யாதொரு தடையோ, இடைஞ்சலோ, ஆட்சேபனையோ 15.02.2006 –ந் தேதி முதல் தெரிவிக்கவில்லை என்றும், தாவா பிராதில் வாதிகள் பொய்யான சங்கதிகளைக் கூறி இந்த பிரதிவாதிகள் ஏதோ இந்த வாதிகளிடம் கடந்த ஓராண்டுக்கு முன்பு அனுமதி கோரி தாவா சொத்தில் குடியிருந்து வருவதாக கூறுவதும் சுத்தப்பொய் என்றும், அதையும் இந்த வாதிகளே கண்டிப்பாய் நிரூபிக்க வேண்டும் என்றும், தாவா சொத்தின் நான்குமாலும் சுத்தப்பிசகு என்றும், தாவா பிராதில் கண்டுள்ள தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு கதவிலக்கம் குறிப்பிடப்படவில்லை. தாவா சொத்தில் இந்த வாதிகள் எந்தக்காலத்திலாவது குடியிருந்து வந்ததாகவோ, வீட்டு வரி செலுத்தி வந்ததாகவோ, யாதொன்றும் துலக்கப்படவில்லை. இந்த வாதிகளும் Without Clean

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:35:48 +0530

Hands –ஆக தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், இந்த வாதிகள் ஏதோ மானாமதுரை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் முதலேற்பு வழக்கு எண்: 7/2004 தாக்கல் செய்து அதில் 23.01.2006ம் தேதியில் வாதிகளுக்குப் பாத்தியமானதென தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளதால் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றும், சுவாதீனப் பரிகாரம் மட்டும் கோருவதாக கூறுவதும் சரியல்ல என்றும், வாதிகள் செலுத்தியுள்ள நீதிமன்றக்கட்டணமும் சரியல்ல என்றும், தாவா வழக்கின் சொத்து மதிப்பும் சரியல்ல என்றும், வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவா பிராது சொத்து விபரத்தில் கண்டுள்ள நான்குமாலும் சரியல்ல என்றும், தாவாச் சொத்திற்கு வடக்கே ராமுத்தேவர் காலியிடம் என்று சொல்லுவதும் சுத்தப்பொய் என்றும், வாதி பிரஸ்தாபிக்கும் தென்வடல் 20 அடிக்கு வடக்கே இந்த பிரதிவாதிகளின் வீடும், அதற்கும் வடக்கே 3 அடி பொதுச் சந்தும், மேற்படி 3அடி பொது சந்திற்கும் வடக்கே ராமுத்தேவர் ஓட்டுவீடும் உள்ளது என்றும், தாவாச் சொத்திற்கு மேற்கே சுப்பையாத் தேவர் காலியிடம் என்று கூறுவதும் சுத்தப்பொய் என்றும், தாவாச் சொத்திற்கு மேற்கே முருகேசத்தேவர் மகனும் இந்த 1ம் பிரதிவாதியின் கணவருமான இந்த 2 முதல் 5 பிரதிவாதிகளின் தந்தையுமான கருப்புச்சாமி என்பவரின் வீடு உள்ளது என்றும், வாதிகள் பிரஸ்தாபிக்கும் தாவா பிராதில் கண்டுள்ள சொத்து விபரமே இந்த வாதிகளுக்கு தெரியாத நிலையில் தாவாச் சொத்தில் இந்த வாதிகளுக்கு யாதொரு பாத்தியமோ உரிமையோ எந்தக்காலத்திலும் இல்லை என்பது உள்ளங்கை நல்லிக்கனிபோல் நன்கு தெரியும் என்றும், தாவாச்சொத்தில் வாதிகளுக்கு யாதொரு பாத்தியமோ உரிமையோ, இல்லாத நிலையில் தாவா வழக்கை தாக்கல் செய்ய இந்த வாதிகளுக்கு யாதொரு Locus Standy– ம் கிடையாது. இந்த வாதிகளும் இந்த பிரதிவாதிகளின் விரோதிகளின் தூண்டுதலின் பேரில் பொய்யான சங்கதிகளைக் கண்டு தாவா வழக்கையும் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், தாவா வழக்கின் வியாஜ்ஜியமூலம் சுத்தப்பிசகு என்றும், தாவா வழக்கின் அமைப்பும் சரியல்ல என்றும், வாதிகள் கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், தாவா வழக்கில் இந்த வாதிகளுக்கு யாதொரு வழக்கு மூலமும் கிடையாது என்றும், தாவா வழக்கை தாக்கல் செய்ய இந்த வாதிகளுக்கு Locus Standy– ம் கிடையாது என்று வாதிகளின் வழக்கை பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய உத்தரவிட வேண்டி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) பிரதிவாதிகள் தரப்பு பதில் எதிர்வழக்குரையின் சுருக்கம்:–</u>**

எதிர்கோருமையாளர்கள்/பிரதிவாதிகளால் தாக்கல் செய்துள்ள எதிர்கோருமையில்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:35:53 +0530

கண்ட சங்கதிகள் அனைத்தையும் எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் மறுத்தும், ஆட்சேபித்தும் இந்த பதில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படுகிறது என்றும், உண்மையில், பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்கோருரிமையானது சிபிசி ஆர்டர் 8 ரூல் 6A ன்படி முறையாக தாக்கல் செய்யவில்லை என்றும், எதிர்கோருரிமைக்கான குறுந்தலைப்பு மற்றும் நெடுந்தலைப்பு அதன்பின் எதிர்கோருரிமை தாக்கலுக்கான விபரங்கள் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்றும், அவ்வாறு தாக்கல் செய்யாததால், தாவா எதிர்கோருரிமையும் எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது என்றும், எதிர்கோருரிமையானது பிரிதொரு வியாஜ்ஜியத்தை தவிர்க்க வேண்டிய நிலைப்பாட்டிலும் அசல் வழக்கில் தீர்வு காணவேண்டியது போலவே எதிர்கோருரிமையை முறையான விசாரணை மேற்கொண்டு ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இந்த பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்கோருரிமையானது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதாக இல்லை என்றும், தாவா வழக்கில் நான்குமால் சரியில்லை என எதிர்கோருரிமையில் பிரதிவாதிகள் எதிர்வாதம் செய்துள்ளதால், நீதிமன்ற ஆணையர் நடவடிக்கையும் எடுக்கவேண்டியது அவசியமாக உள்ளது என்றும், அவ்வாறு ஆணையர் நடவடிக்கை எடுக்கும்பட்சத்தில் இந்த வாதிகள் தங்களது சொத்துவிபரத்தினை நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்த கடமைப்பட்டுள்ளனர். தேவைப்பட்டால் எதிர்கோருரிமைக்கு கூடுதல் பதில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவும், தங்களது உரிமையினை இதன் மூலம் இந்த வாதிகள் ரிசர்வ் செய்து கொள்வதாகவும் பிரதிவாதிகள் தரப்பில் முந்தைய வழக்கறிஞர் சமூகம் நீதிமன்றத்தில் 1 முதல் 6 வரை பிரதிவாதிகளுக்கு ஆஜராகி பிரதிவாதிகள் தரப்பில் உரிய கால அவகாசம் அளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால், சமூகம் நீதிமன்றத்தில் 1 முதல் 6 வரை பிரதிவாதிகளை ஒருதரப்பாக்கப்பட்டு, கடந்த 30.06.2022ம் தேதியன்று தீர்ப்பும், தீர்ப்பாணையும் வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி தீர்ப்பும், தீர்ப்பாணையும் வழங்கப்பட்ட பிறகு, மேற்படி தீர்ப்பாணையை ரத்து செய்திட மனு தாக்கல் செய்து, தாவா எதிர்வழக்குரையுடன் எதிர்கோருரிமை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இதிலிருந்தே பிரதிவாதிகள்/எதிர்கோருரிமையாளர்கள் தாவா வழக்கை காலம் கடத்த வேண்டும் என்ற கெட்ட உள்நோக்கத்தில் இருந்து வருகின்றனர் என்பது தெளிவாகிறது என்றும், மேலும் வாதிகள் தாவா வழக்குரையிலேயே தங்களது தரப்பினை தெளிவுபடுத்தியுள்ளனர் என்றும், எனவே எதிர்மனுதாரர்கள்/வாதிகள் வகை கூடுதல் செலவுத் தொகையுடன்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:36:05 +0530

எதிர்கோருரிமையை தள்ளுபடி செய்ய வேண்டி பதில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4**) எழுவினாக்கள்:–**

வாதிகளின் வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை, எதிர்கோருரிமைக்கான எதிர்வழக்குரை மற்றும் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலனை செய்து கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.

4.1) வாதிகள் கோரும் ஒப்படைப்பு பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

4.2) இவ்வழக்கு முன்தீர்ப்புத்தடை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா?

4.3)பிரதிவாதிகள் கோரும் விளம்புகை பரிகாரம் பிரதிவாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

4.4)பிரதிவாதிகள் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிரதிவாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

4.5) தரப்பினருக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரங்கள் என்ன?

5) இருபுறமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6) வாதி தரப்பில் 2ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் 6ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

7) வாதிகள் இந்த தாவாவை மானாமதுரை டி.மு. கோர்ட்டில் மு.வ.எண்.7/2004 வழக்கில் தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியமானது என தீர்வு காணப்பட்டுள்ளதாலும், வாதிகளிடம் அனுமதி பெற்று பிரதிவாதிகள் தாவா சொத்தில் குடியிருந்து வருவதில், சமூகம் நீதிமன்றம் விடுக்கும் கால கெடுவிற்குள் நிர் வில்லங்க மன்னியில் காலி செய்து வாதிகளிடம் ஒப்புவிக்க வேண்டியும், அவ்வாறு பிரதிவாதிகள் செய்ய தவறும்பட்சத்தில், வாதிகளால் பிரதிவாதிகளை காலி செய்ய ஏதுவாக நடவடிக்கை மேற்கொள்ள பிரதிவாதிகள் மீது Eviction நடவடிக்கைக்கான ஒரு சுவாதீன பரிகாரம் வழங்கி உத்தரவிட வேண்டுமாய் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, அதில் எதிர்கோருரிமையாக தாவா சொத்தில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:36:10 +0530

பரிகாரம் கோரியுள்ள நிலையில், அதற்கு வாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி வாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் Reply Statement என குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>9) எழுவினா–1</u>

வாதிகள் தங்களது பிராதில் அசல் வழக்கு எண்.7/2004ல் ஏற்பட்ட தீர்ப்பில் மேற்படி அசல் வழக்கில் கண்ட 8வது லக்க சொத்தான தாவா சொத்து இந்த நம்பர் வாதிகளுக்கு பாத்தியமுடையது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சொல்லியுள்ள நிலையில், மேற்படி மானாமதுரை டி.மு.கோர்ட் அசல் வழக்கு எண்.7/2004ல் ஏற்பட்ட தீர்ப்பாணை தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பாணையில் தாவா சொத்தும் கண்டுள்ளது என்பது வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்த வகையில் அறிய முடிகிறது. வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதிகள் தரப்பில் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலகநகல் என்று அறிய முடிகிறது. மேற்படி வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பை இந்த நம்பர் பிரதிவாதிகளுக்கு அஞ்சலகம் மூலம் அனுப்பபட்டது என்பதை காண்பிக்க அஞ்சலக ரசீதுகள் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை இந்த நம்பர் 1ம் பிரதிவாதியும், 6ம் பிரதிவாதியும் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இதர பிரதிவாதிகள் மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட கவர் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியமுடையது என்பது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது என்ற வாதியின் கூற்று நிரூபணம் ஆகியுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10) பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 தீர்ப்பாணையில் கண்ட படி தாவா சொத்து வாதிகளுக்கு கடந்த 2006ம் ஆண்டு தீர்ப்பின் மூலம் ஜனவரி திங்கள் 23ம் நாள் அ.வ.எண்.7/2004ல் ஏற்பட்ட தீர்ப்பின் மூலம் கிடைக்கப் பெற்றது என்பதை ஒப்புக்கொண்டுள்ள போதிலும், கடந்த 2006ம் வருடம் பிப்ரவரி மாதம் 15ம் தேதி இந்த நம்பர் வாதிகள் வகையறாவும், பிரதிவாதிகள் வகையறாவும் கிராம முக்கியஸ்தர்கள்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:36:14 +0530

முன்னிலையில் சமரசம் பேசி மதுரையில் பொது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட கடையை இந்த வாதிகள் அடைந்துகொள்வது என்றும், தாவா சொத்தை பிரதிவாதிகள் அடைந்து கொள்வது என்றும் சமாதானம் பேசி மேற்படி 15.02.2006ம் தேதி முதல் மேற்படி சொத்தை தங்களது தனித்த பாத்தியத்தில் வைத்து அன்றே சுவாதீனம் அடைந்து தங்களது அனுபவத்தில் வைத்து அனுபவம் செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நம்பர் 1ம் வாதியின் கணவரும், 2 முதல் 5 வாதிகளின் தகப்பனாருமான கந்தையாவும், இந்த நம்பர் 1ம் பிரதிவாதியின் கணவரும் 2 முதல் 5 பிரதிவாதிகளின் தகப்பனாருமான கருப்பசாமியும் 6ம் பிரதிவாதியான வேலுச்சாமியும் உடன் பிறந்த சகோதரர்கள் ஆவார்கள். இந்த நிலையில், தாவா சொத்து ஏற்கனவே நடைபெற்று முடிந்த மானாமதுரை டி.மு கோர்ட் அசல் வழக்கு எண்.7/2004ல் ஏற்பட்ட தீர்ப்பில் வாதிகளுக்கு தாவா சொத்து பாத்தியமும், உரிமையும் உள்ளது என்று சொல்லியுள்ள நிலையில், வாதிகளின் அனுமதியின் பேரில் தாவா சொத்தில் குடியிருந்து வரக்கூடியதாக சொல்லக்கூடும் இந்த பிரதிவாதிகளுக்கு Prescriptive titile by adverse possession சித்தித்துவிட்டதாக பிரதிவாதிகள் தரப்பில் எடுத்துரைத்துள்ளனர் adverse possession என்ற உரிமை கோருபவர் யாருக்கு எதிராக கோருகிறாரோ அவரை உண்மையான உரிமையாளர் என ஏற்றுக்கொண்டதாக சட்டம் கருதுகிறது. adverse possession என்ற நிலைப்பாட்டை எடுத்துள்ள நிலையில் ஏதோ தாவா சொத்தை இந்த பிரதிவாதிகள் அனுபவத்தில் எடுத்துக்கொண்டது போலும் அதற்கு ஈடாக மதுரையில் உள்ள கடையை இந்த வாதிகள் அடைந்து கொள்வது என்றும், ஊர் பெரியோர்கள் முன்னிலையில் பேசி கொண்டதாக சொல்லப்பட்டுள்ள பிரதிவாதிகளின் வாதமானது முன்னுக்கு பின் முரணாக உள்ளது. அவ்வாறு சொத்தை மாற்றிக்கொண்டதற்கு பிரதிவாதிகள் தரப்பில் யாதொரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை அறிய முடிகிறது.

11) பிரதிவாதிகள் தரப்பில் 6ம் பிரதிவாதி பி.வா.சா.ஆ.1 ஆக விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ1 முதல் பி.வா.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில், பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் வீட்டு வரி ரசீதுகளாகவும், வழிகாட்டி மதிப்பு சான்று இணையவழி பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.8 ஆகவும், பி.வா.சா.ஆ.9 மற்றும் 10 வீட்டு வரி ரசீதுகளாகவும், பி.வா.சா.ஆ.11 இந்த நம்பர் 5ம் பிரதிவாதி பெயரில் உள்ள மின் இணைப்பு

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:36:19 +0530

கட்டண ரசீது என்பதையும் அறிய முடிகிறது. மேற்படி ஆவணங்கள் கடந்த 2006ம் ஆண்டு முதல் இருந்து வரக்கூடியதாக உள்ள நிலையில், மேற்படி ஆவணங்கள் தாவா சொத்தின் உரிமை மூலத்தை தீர்மானிக்கக்கூடிய ஆவணம் அல்ல என்ற அடிப்படையிலும் ஏற்கனவே வாதிகளுக்கு ஆதரவாக விளம்புகை பரிகாரம் மானாமதுரை டி.மு.கோர்ட் அ.வ.எண்.7/2004ல் தீர்மானிக்கப்பட்டுள்ளதாலும் அதனை எதிர்த்து எவ்வித மேல்முறையீடும் செய்யாத நிலையில் மேற்படி தீர்ப்பே நாளது தேதி வரை நிலைக்கக்கூடியது என்ற அடிப்படையிலும், வாதிகளுக்கு தாவா சொத்தில் உரிமை இருப்பதாக விளம்புகை செய்யப்பட்டுவிட்டதால் தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமைமூலமும் இல்லை என்பதும் பிரதிவாதிகளின் ஆக்கிரமிப்பானது Permissive Possession ஆக இருந்து வருவதால் வாதிகள் கேட்கும் காலத்தில் தாவா சொத்திலிருந்து பிரதிவாதிகள் வெளியேற கடமைப்பட்டவர்கள் என்ற அடிப்படையிலும், வாதிகள் கேட்டுள்ள ஒப்படைப்பு பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்து, எழுவினா-1 வாதிகளுக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது.

<u>12) எழுவினா-2</u>

இவ்வழக்கு முன் தீர்ப்பு தடையால் பாதிப்படைந்துள்ளதாக எவ்வித கட்சியும் பிரதிவாதிகள் தரப்பில் எடுத்துரைக்காத நிலையில் மேற்படி எழுவினா வனையப்பட்டுள்ளது. முன்தீர்ப்பு தடை தோஷத்தால் தாவா வழக்கு பாதிப்படைந்துள்ளதா என்பதை தீர்மானிப்பதற்கு முன்பு மேற்படி முன் தீர்ப்பு தடை குறித்து சிபிசி பிரிவு 11ல் சொல்லப்பட்டுள்ள விஷயங்களை பரிசீலிக்க வேண்டியது அவசியம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13) "11 Res-Judicata-No Court shall try any suit or issue in which the matter directly and substantially in issue has been directly and substantially in issue in a former suit between the same parties or between the parties under whom they or any of them claim, litigating under the same title, in a court competient to try such subsequent suit or the suit in which such issue has been subsequently raised and has been heard and finally decided by such court" என சொல்லப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பார்த்தோமேயானல் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விஷயத்தை மீண்டும் வழக்கிட முடியாது என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் தாவா வழக்கானது ஏற்கனவே

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:36:25 +0530

தீர்மானிக்கப்பட்ட விஷயமான விளம்புகை பொறுத்து தாக்கல் செய்யவில்லை. மேற்படி வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் தாவா சொத்தின் அனுபவத்தில் பிரதிவாதிகள் இல்லை என்பதை பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையின் வாயிலாகவே அறிய முடிகிறது. அதன் அடிப்படையில் தற்போதைய சூழ்நிலையில், வாதிகளுக்கு பிரதிவாதிகளை தாவா சொத்திலிருந்து வெளியேற்ற வேண்டியது அவசியம் என்ற அடிப்படையில் ஒப்படைப்பு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த நிர் வழக்கு முன் தீர்ப்பு தடையால் பாதிப்படையவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எழுவினா2 வாதிகளுக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது.

**<u>14) எழுவினா–3</u>**

பிரதிவாதிகள் தங்களது எதிர்கோருரிமையில் விளம்புகை பரிகாரம் கோரியுள்ள நிலையில், பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் மூலம் தாவா சொத்தின் உரிமைமூலத்தை தீர்மானிக்க முடியாது என்ற அடிப்படையிலும், பிரதிவாதிகள் கட்சி படி தாவா சொத்திற்கு ஈடாக மதுரையில் உள்ள கடையை வாதிகள் வகையறாவிற்கு கொடுத்ததாக சொல்லப்படுவதற்கு யாதொரு ஆவணமும் சமர்ப்பிக்கப்படவில்லை என்ற அடிப்படையிலும் தாவா சொத்து வாதிகளுக்கு Adverse possession அடிப்படையில் உரிமை மூலம் வந்துவிட்டதாக கருத முடியாது என்ற அடிப்படையிலும் பிரதிவாதிகளின் அனுபவமானது Permissive Possession ஆகவே கருதும்பட்சத்தில் Permissive Possessor cannot claim title over the property என்ற அடிப்படையில் தாவா சொத்தில் பிரதிவாதிகள் எதிர்கோருரிமையில் கேட்டுள்ள விளம்புகை பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்து, எழுவினா–3 பிரதிவாதிகளுக்கு எதிராக தீர்மானிக்கப்படுகிறது.

**<u>15) எழுவினா–4</u>**

தாவா சொத்தில் பிரதிவாதிகள் எதிர்கோருரிமை மூலம் கேட்டுள்ள விளம்புகை பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா–3ல் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், பிரதிவாதிகளுக்கு கிடைக்கக்கூடியதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எழுவினா–4 பிரதிவாதிகளுக்கு எதிராக தீர்மானிக்கப்படுகிறது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:36:31 +0530

**16) எழுவினா–5**

மேலே கண்ட எழுவினாக்கள் அனைத்தும் இவ்வழக்கில் கண்ட வாதிகளுக்கு ஆதரவாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், தரப்பினர்களுக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**17) முடிவாக, அ)வாதிகளின் தாவா அனுமதிக்கப்பட்டு, வாதிகளின் வீட்டிலிருந்து பிரதிவாதிகள் இந்த தீர்ப்பு தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் வெளியேற வேண்டும் என்றும் அவ்வாறு செய்ய தவறும்பட்சத்தில் பிரதிவாதிகளை தாவா சொத்திலிருந்து வெளியேற்றுவதற்கு ஏதுவாக சுவாதீன பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**ஆ)பிரதிவாதிகள்/எதிர்கோருரிமையாளர்கள் கேட்டுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்து, பிரதிவாதிகளின் எதிர்கோருரிமை பொறுத்து தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**இ) தரப்பினர்களின் உறவுமுறையை கருத்திற்கொண்டு செலவுத்தொகை குறித்த உத்தரவு எதுவும் குறிப்பிடப்படவில்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் வருடம் மார்ச் மாதம் 10–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:36:36 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்

நீதித்துறை நடுவர், திருப்புவனம்

| | |
|---|---|
| **வாதி தரப்பு சாட்சிகள்** | |
| வா.சா.1 | செந்தில்குமார் |
| **வாதி தரப்பு சான்றாவணங்கள்** | |
| வா.சா.ஆ.1 | மானாமதுரை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற மு.வ.எண்.7/2004 தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | வாதிகள் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு 28.01.2020ம் தேதியிட்ட அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | அஞ்சல் ரசீதுகள் (6 எண்ணம்) |
| வா.சா.ஆ.4 | 1, 6 பிரதிவாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான |

| | |
|---|---|
| | அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் (2 எண்ணம்) |
| வா.சா.ஆ.5 | 2 முதல் 5 பிரதிவாதிகள் மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வந்த அஞ்சல் உறைகள் (4 எண்ணம்) |

| | |
|---|---|
| **பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்** | |
| பி.வா.சா.1 | வேலுச்சாமி |

பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:

| | |
|---|---|
| பி.வா.சா.ஆ.1 | மு.கருப்புச்சாமி பெயரில் க.எண்.1/158க்கு 2005–2006க்கு வரி செலுத்திய வீட்டு வரி ரசீது அசல் |
| பி.வா.சாஆ.2 | மு.கருப்புச்சாமி பெயரில் க.எண்.1.58க்கு 2006–2007க்கு வரி செலுத்திய வீட்டு வரி ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.3 | மு.வேலுச்சாமி பெயரில் க.எண்.1.58க்கு 2013–2014க்கு வரி செலுத்திய வீட்டு வரி ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.4 | மு.கருப்புச்சாமி பெயரில் க.எண்.1.58க்கு 2018–2019க்கு வரி செலுத்திய வீட்டு வரி ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.5 | மு.கருப்புச்சாமி பெயரில் க.எண்.1/58க்கு 2020–2021க்கு வரி செலுத்திய வீட்டு வரி ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.6 | மு.கருப்புச்சாமி பெயரில் க.எண்.1/58டகசு 2020–2022க்கு வரி செலுத்திய வீட்டு வரி ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.7 | மு.கருப்புச்சாமி பெயரில் க.எண்.1/58க்கு 2022–2023க்கு வரி செலுத்திய வீட்டு வரி ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.8 | வழிகாட்டி மதிப்பு சான்று இணையவழி பதிவிறக்க நகல் |
| பி.வா.சா.ஆ.9 | மு.கருப்புச்சாமி, மு.வேலுச்சாமிபெயரில் 2019–2020க்கு வரி செலுத்திய வீட்டு வரி ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.10 | மு.கருப்புச்சாமி பெயரில் க.எண்.1/58க்கு 2023–2024க்கு வரி செலுத்திய வீட்டு வரி ரசீது இணையதள பதிவிறக்க நகல் |
| பி.வா.சா.ஆ.11 | வி.முருகேசன் பெயரில் மின் இணைப்பு எண்.054290019‌1க்கு செலுத்திய மின் கட்டண ரசீது இணையதள பதிவிறக்க நகல் |

நீதிமன்ற சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:இல்லை

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.10 17:36:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
திருப்புவனம்
அசல் வழக்கு எண்.8/2020
தீர்ப்புரை
வரைவு/சீரான
நாள்:10.03.2026